

# வேளாண்மை செய்திகள்

# நகரத்து மக்களுக்கான அடர்காடு வேளாண்மை



வேளாண்மை என்றால் உணவுக்காக பயிர்களை சாகுபடி செய்வது தான் என்ற நிலையை மாற்றி சற்று வித்தியாசமாக யோசித்து பணமும் ஈட்ட முடியும் என்று நிரூபித்திருக்கிறார் புதுச்சேரி மாங்குளம் ஆனந்த்.

25 ஏக்கர் நிலப்பரப்பில் அடர்காட்டை உருவாக்கி அதில் பல்வேறு வகையான மரங்களை நட்டு அந்த நிலத்தை இயற்கை வேளாண் சாகுபடிக்கான மாதிரி பண்ணையாகவும், மக்களுக்கான இயற்கை பார்வையிடல் மையமாகவும உருவாக்கி இருக்கிறார். இது குறித்து அவர் விளக்கியது வருமாறு:-

## அடர் வேளாண் காடு

மனித வளர்ச்சிக்காக இயற்கையாக இருந்த காடுகளை அழித்து விட்டோம். இப்போது, காடுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து உலக நாடுகள் மர வளர்ப்பில் இறங்கி உள்ளன. இதுபோன்ற நிலையில், நமது நாட்டிலும் காடுகளின் பரப்பை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. காடுகள் இருந்தால் தான் மழை பொழிவு கிடைத்து வேளாண்மை செழிக்கும். அனைத்து உயிரினங்களின் வாழ்வுக்கும் காடுகள் அடிப்படையானது.

இதனை கருத்தில் கொண்டு நகரத்தை ஒட்டிய பகுதியில் ஒரு காட்டை உருவாக்க முடிவெடுத்தேன். இங்கு உரங்கள், பூச்சிக்கொல்லிகள் அனைத்தையும் தவிர்த்து விட்டு இயற்கையாக, இயற்கையை வளர விட்டு பலன் பெறுவது என்ற முறையை கடைப்பிடித்தேன்.

## இயற்கையாக உருவாகும்

பொதுவாக, இயற்கை தன்னைத்தானே உருவாக்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தது. அதற்கு சற்று நாம் உறுதுணையாக இருந்தால் போதும். அதில் இருந்து மனிதர்கள் நிறையை பெற முடியும். இதனை காடுகளின் வளர்ச்சி மூலம் நாம் பார்க்கலாம். இந்த வேளாண் காட்டில் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே இயற்கை எரு இடுகிறோம். எரு இடுதலால் இங்குள்ள நிலத்தின் மண்ணில் மட்குகள் உருவாகி மண் வளமாகிறது. இதனால், நிலமெங்கும் இயல்பாகவே மண்புழு, பூச்சி இனங்கள், மண்ணில் உருவாகும் களைச்செடிகள் உருவாகி வளர்கிறது. இதனால் மண்ணானது வளம் பெறுகிறது. மழை வரும் முன் உழுதல் பணி நடைபெறுவதால், மழைபெய்யும் காலங்களில் மழைநீர் முழுக்க மண்ணில் இறக்குகிறது.

இந்த காட்டில் நெல்லி, சப்போட்டா, கொய்யா, அத்தி, வாட்டர் ஆப்பிள் உள்பட 150-க்கும் மேற்பட்ட மர வகை நடவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, நெல்லி 8 ஏக்கரிலும், சப்போட்டா 5 ஏக்கரிலும், தென்னை வரப்பு பயிராகவும் நடவு செய்யப்பட்டு சொட்டு நீர் மூலம் பாசன வசதி பெறுகின்றன.

## மழைநீர் சேமிப்பு

பண்ணைகளில் மழைநீரை சேமிப்பதால் ஆண்டுதோறும் வற்றாமல் பாசனநீர் கிடைக்கிறது. இங்கு சேமிக்கப்பட்ட மழைநீரின் பயனால் கிணற்றில் நீர் வற்றாமல் செழிப்பாக நீர் வளம் காணப்படுகிறது. இந்த அடர்காட்டின் நிலத்தில் தோன்றும் களைச்செடிகளை அப்படியே மடக்கி உழுது உரமாக்கி மண்ணை வளப்படுத்தி விடுகிறோம்.

இந்த காட்டில்

தேக்கு, பர்மா தேக்கு, நாட்டு தேக்கு, மலைவேம்பு, சந்தனம், ரோஸ் உட், சாத்துக்குடி போன்ற ரகங்கள் உள்ளன. ஒவ்வொரு மரத்திலும் தனித்தனியான சிறப்பு குணமுடைய சிற்றின மரவகைகளும் நடப்பட்டுள்ளன.

ஊறுகாய் எலுமிச்சை, ஜூஸ் எலுமிச்சை, மலேசியா எலுமிச்சை, சாதா எலுமிச்சை, நாட்டுக் கொய்யா, சிவப்பு கொய்யா போன்ற 100 வகைக்கு மேற்பட்ட பழ மரங்கள் உள்ளன.

இந்த காடு உருவாகும் முன்பு இந்த பகுதியில் பறவைகள் அவ்வளவாக இல்லை. ஆனால், இப்போது விதவிதமான பறவைகள் ஏராளமாக வருகின்றன. இப்பழத்தோட்டத்தில் கீழே விழும் பழங்கள் மட்டுமே சேகரிப்படுகிறது. இங்கு ஒரு போதும் அறுவடையை கணக்கில் கொண்டு காய்களை பறித்து பழுக்க வைப்பது கிடையாது. இவ்வாறு இந்தப்பண்ணையில் இயற்கை வேளாண்மை என்பது சூழல், பருவகாலம், மண் தன்மை, அறுவடை என்று எல்லா செயல்களும் இயற்கையை சார்ந்தே உள்ளது. அதாவது, இந்த காடு என்பதும் ஒரு வகை வேளாண்மை தான்.

## முன்னோரின் வழி தான்

முன்னொரு காலத்தில் நமது முன்னோர்கள் பழம், காய், மூலிகை, கால்நடைகளுக்கான தீவனம் என்று அனைத்து தேவைகளையும் வேளாண்மை என்ற ஒன்றின் மூலமே பெற்று வந்தனர். இந்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே இந்த அடர்காட்டு வேளாண் பண்ணையும் இயங்குகிறது. இந்த காட்டின் முகப்பில் வெற்றிலை கொடிகளும், திராட்சை கொடிகளும் இங்கு வரும் நகரத்து மனிதர்களுக்கு புதிய வேளாண்மையை கற்று கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

